கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 சுலைமான் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 11.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

1. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள 2ம் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதில் முதல் சாட்சி கையெழுத்து முகமது கௌஸ் என்பவருடையது ஆகும். அவர் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி பி.சா.ஆ.11 ஆவணத்தில் மைமூன் பீபி மற்றும் ஜெய்பூன் பீபி ஆகீயோர் கையொப்பம் செய்துள்ளார்கள். எனது தாயார் பெயர் மைமூன் பீபி ஆவார். மேற்படி கையெழுத்து என்னுடைய தாயாரின் கையெழுத்து தான். இவ்வழக்கை முதலில் தாக்கல் செய்தது ஜெய்பூன் பீபி மற்றும் பர்வீன் ஆகும். ஜெய்பூன் பீபி சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

2. மேற்படி பி.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஜெய்பூன் பீபி உடையது தான். மேற்படி பி.சா.ஆ.11 ஆவணத்தை ரபீக் பாஷா என்பவர் எழுதினார். மேற்படி ரபீக் பாஷா என்பவர் ஜெய்பூன் பீபியின் மகன் ஆவார். பர்வீனின் சகோதரர் ஆவார். ஜெய்பீன் பீபி இறந்த பிறகு அவரது வாரிகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். பி.சா.ஆ.11 ஆவணத்தில் முத்திரை மீது மேற்படி இரண்டு நபர்கள் கையெப்பம் செய்வதை நான் பார்த்தேன். மேற்படி இரண்டு நபர்களும் சாட்சியாக நானும், முகமது கௌஸ் ஆகியோர் கையொப்பம் செய்வதை பார்த்தார்கள்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

YUGHATHY MARIYA Digitally signed by YUGHATHY MARIYA Date: 2025.11.11 17:49:49 +0530

**Additional District Munsif,**
**Kulithalai.**